நாள் - 10.04.2023

**C.C. No**.133/2021

ம.சா.1-நடராஜன், த/பெ. பழனிசாமி.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 21**st day of April** 2023.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு ஆங்கில் எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். புகார், பிரமாண வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.8 பொது அதிகாரபத்திரத்தில் வரவு செலவு குறித்து எனக்கு தெரியும் என்று எங்காவது குறிப்பிடபட்டுள்ளதா என்றால் குறிப்பிடபடவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப வழக்கறிஞருக்கு நான் தகவல் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என் முன்னிலையில் எதிரிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை புகார், வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.8 பொது அதிகாரபத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.8 பொது அதிகாரபத்திரத்திரமானது ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள நிலையில் அவ்வாவணத்தை அதை எழுதி கொடுத்த பொன்னமாளுக்கு தமிழில் படித்து காண்பிக்கப்பட்டு அவருடைய பெருவிரல் ரேகை பெறப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

3. 2012ல் பல்லடம் சிட்ஸ்பன்சில் எதிரி 5 லட்சம் ரூபாய் சீட்டில் உறுப்பினராக இருந்தார் என்றால் சரியல்ல. அப்பொழுது சீட்டு தொகையை எடுத்தற்காக கொடுக்கப்பட்டது தான் காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு என்றால் சரியல்ல. எதிரி மாததவணையை சரியாக செலுத்தாததால் தான் வட்டி தொகைக்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவர் சீட்டே போடவில்லை.

4. பல்லடம் சிட்பன்சிற்கு கொடுக்கவேண்டிய காலவதியான கடனிற்காக தற்பொழுது பொன்னமாளிடம் வரவு செலவு இருப்பதாக குறிப்பிட்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எவ்வித கடன் தொகையையும் கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பொன்னமாளுக்காக சாட்சியம் அளிக்க நான் அருகதை அற்றவர் என்றால் சரியல்ல.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2023.04.21 16:33:50 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**